Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**
**Case No. CC.NO. 57/2022**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 6 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு.கார்த்திகேயன் | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| **தந்தை/கணவர் பெயர்** | திரு. சுந்தரம் | **கிராமம்/ஊர்** | திருப்பத்தூர் |
| **வயது** | 60 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 12th day of August 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். இதே கந்திலி காவல் நிலையத்தில் பணியாற்றிய போது கடந்த 15.01.2020 நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கனகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி இரவு 22.30 மணிக்கு நிலைய குற்ற எண். 18/2020 இ.த.ச பிரிவுகள் 294(b), 324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 16.01.2020 அன்று காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சசிக்குமார் மற்றும் ஞானவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே என்னால் அ.சா.ஆ.8,9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).**

2. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே 09.30 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 4 அடி நீளமும் 5 இன்ச் சுற்றளவும் கொண்ட **விறகுகட்டை** ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91**

**அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர், இவ்வழக்கின் 1 முதல் 4 வரையிலான பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதவி செய்தேன். பின்னர், இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புகார்தாரரிடம் இருந்து புகார் வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கு முன்பாகவே என் வழக்கின் 1ம் எதிரி தங்கவேல் மற்றும் அவரது மனைவி பச்சையம்மாள் ஆகியோர் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் அளித்த புகாரின் பேரில் குற்ற எண். 17/2020 பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். சிசி 29/2022 என்ற வழக்கானது அதன் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி தங்கவேலுவின் மருமகன் ஜெயகாந்தன், பெரியதம்பி, வசந்தா மற்றும் பாரதி ஆகியோர அவ்வழக்கில் எதிரிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். எந்த நேரத்தில் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை எனக்கு யார் அடையாளம் காட்டியது என்றால் மணி என்பவர் அடையாளம் காட்டினார். மேற்படி நபர் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரிதான். இவ் வழக்கில் உண்மையில் பாதிக்கப்பட்டது எதிரி தான் என்றாலும் அதை மறைத்து புகார் தாரரிடம் இருந்து நான் புகார் வாக்குமூலத்தை பெற்று பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி இவ்வழக்கின் 2ம் எதிரியான சிவா என்ற நபரை மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் விடுவித்து உத்தரவிட்டுள்ளது என்றால் சரிதான். **அந்த உத்தரவின் நகல் எ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனவே இவ்வழக்கில் தொடர்பில்லாத நபரை வழக்கில் தொடர்பு படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதால், நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் புகார் தாரர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு உள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**Signature of Witness** **Judicial Magistrate No.II**
**Tirupathur.**

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**
**Case No. CC.NO. 57/2022**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 7 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. உலகநாதன் | **தொழில்** | காவல் ஆய்வாளர் |
| **தந்தை/கணவர் பெயர்** | திரு. சன்னியாசி | **கிராமம்/ஊர்** | |
| **வயது** | | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 12th day of August 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

1. நான் தற்போது குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கந்திலி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது, நிலைய குற்ற எண். 18/2020 இ.த.ச பிரிவுகள் 294(b),324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எனது பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்ட நான், அ.சா.1 ஐ மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பிணை பெற்றுக்கொண்டதால் அவர்கள் கைது செய்யப்படவில்லை.

2. பின்னர் வழக்கு சம்பவத்தில் காயமடைந்த கனகா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. செந்தில்நாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று வழங்கிய காயச்சான்றிதழ் பெற்றேன். அந்த காயச்சான்று ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து அ.சா.1 மூலம் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச பிரிவுகள் 294(b), 324 லிருந்து 294(b), 323, 326 ஆக பிரிவுமாறுதல் அறிக்கை

மூலம் பிரிவு மாற்றம் செய்தேன். **(அந்த பிரிவு மாறுதல் அறிக்கை என்னால் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 326 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மற்றும் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரிகளுக்கு எதிராக தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**Signature of Witness**

**Judicial Magistrate No.II**
**Tirupathur.**